**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2025 ம் வருடம் ஏப்ரல் மாதம் 05 ம் நாள் சனிக்கிழமை**

**I.A.No.03/2025**
**in**
**O.S.No.40/2024**

1. T.குப்பமுத்து (இறப்பு)
2. பி.மு.திருமுருகன்
3. தி.உமாமகேஸ்வரி
4. தி.காளிஸ்வரன்
5. தி.மகரநாதன்
6. தி.ருத்ரகாந்த் ...மனுதாரர்கள்/வாதிகள்

P2 to P6 LR's of deceased P1 as per order in I.A.No.853/2015 was allowed. Dated : 19.12.2015. Amended as per order Dated : 19.12.2015.
D5 and D6 are declared as major as per order in I.A.No.02/2025, Dated : 25.02.2025.

/எதிர்/

1. P.முத்துராமலிங்கம்
2. வட்டாட்சியர், கடலாடி.
3. உதவி இயக்குநர்,
   நிலஅளவை துறை, இராமநாதபுரம். ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 02.04.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.H.முரளிதரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை

இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுவில் கோரியுள்ளபடி பிராதினை சீர்திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி கட்டளை 6, விதி 17, 18 சி.பி.சி.-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

தாவா வழக்கிற்கு இப்பால் 5, 6 பிரதிவாதிகள் கடந்த 2019 மற்றும் 2020ம் ஆண்டு வாக்கில் மைனர் நிலையில் இருந்து மேஜர் நிலையை அடைந்த நிலையில் அவர்களுக்கு கார்டியன் ஸ்தானத்தில் இருந்த 2ம் வாதி ஆகிய மனுதாரரை கார்டியன் ஸ்தானத்தில் இருந்து Discharge செய்ய மனு I.A.NO.1/2025 தாக்கல் செய்யப்பட்டு, மேஜர் டிக்ளர்ரேசன் மனு I.A.NO.2/2025 தாக்கல் செய்யப்பட்டு கடந்த 25.02.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் படி தாவா வழக்கின் பிராதில் 5, 6 பிரதிவாதிகளை பொறுத்து மைனர் எனவும், அவர்களின் கார்டியன் என்று குறிப்பிட்டு பிராதின் குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பில் குறிப்பிட்டுள்ள சரத்துகளை நீக்கிக்கொண்டு அவர்களின் வயதினை 5ம் வாதிக்கு 25 என்றும் 6ம் வாதிக்கு 24 என்றும் சேர்த்துக்கொண்டு பிராதினை திருத்தம் செய்ய வேண்டியதாய் இருக்கிறது என்றும், தாவா வழக்கில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்திருக்கும் திருத்தம் செய்யப்பட்ட பிராதின் நெடுந்தலைப்பில் 3ம் வாதியை 1, 3 வாதிகளின் மகள் என்று குறிப்பிட்டு தவறுதலாக தட்டச்சு பிழை ஏற்பட்டதை 1, 2 வாதிகளின் மகள்

எனவும், அது போல் 4 முதல் 6 வாதிகளை 1, 3 வாதிகளின் மகன் என்பதை 1, 2 வாதிகளின் மகன் எனவும் பிராதில் ஏற்பட்டுள்ள தட்டச்சு குறைபாடுகளையும் திருத்தம் செய்து கொள்ளவும், 3 வது பாராவின் 10 வரியில் நில அளவை வரைபடமான F.M.B வரைபடத்தில் என்பதற்க்கு அடுத்த படியாக அளவுகள் குறைவாக இருப்பதாக கூறி என்பதை நீக்கிக்கொண்டு தாவா சொத்தின் கிரைய ஆவணத்தின்படி வரைபடம் தயார் செய்யாமல் **அதாவது தென்புறமாக இருந்து சப்டிவிசன் செய்யாமல் தவறுதலாக வடபுறத்தில் இருந்து சப்டிவிசன் செய்து வரைபடம் ஏற்படுத்தி குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதுடன்** என்று சேர்த்துக்கொண்டும் பிராதினை திருத்தம் செய்து கொள்ளக்கோரியும், 1ம் பிரதிவாதி பிராதிற்கு பின்னல் ஆக்கிரமிப்பு செய்து ஏற்படுத்தியுள்ள கட்டுமானங்களை இடித்து அப்புறப்படுத்தவும் 1ம் பிரதிவாதிக்கு எதிராக உரிய பரிகாரம் கோரியும் பிராது திருத்தம் செய்ய கோரும் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதின் பேரில் பிராது திருத்தம் செய்யப்பட்டுள்ளது என சேர்க்க கோரியும், நீதிமன்ற மூலம் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அவர் மூலமாக தாவா சொத்தினை அளவீடு செய்த போது 1ம் பிரதிவாதி தரப்பில் தாவா சொத்தில் ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்பு பற்றிய விபரங்கள் வாதிகளுக்கு தெரிய வந்த நிலையில் மேற்படி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி அப்புறப்படுத்தி தர உரிய பரிகாரங்கள் கோர உரிய நீதிமன்ற கட்டணங்கள் செலுத்தி பரிகாரங்கள் கோர ஏதுவாக பிராதின் அதிகார வரம்பு மற்றும் நீதிமன்ற கட்டண விபரங்களை திருத்தம் செய்து கொள்ள கோரியும், தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்பு கட்டுமானங்களை இடித்து அப்புறப்படுத்தி வாதிகளின் சுவாதீனத்திற்கு ஒப்படைக்க தர கோரும்

பரிகாரத்திற்கு தாவா ஆக்கிரமிப்பு கட்டுமானத்தினை ரூ.20,000.00 ஆக மதித்து அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டம் பிரிவு 25(a)ன் படி ரூ.600/- ஆகவும், தாவா சொத்தில் பிரதிவாதி ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த உத்திரவிட தக்கதாய் 1ம் பிரதிவாதியின் பேரில் கோரியுள்ள செயல் உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு தாவாவினை தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டம் பிரிவு 27(c)ன் படி ரூ.30/- என சேர்த்தும் ஆக மொத்தம் ரூ.151/-என்பதை நீக்கிக்கொண்டு ஆக மொத்தம் ரூ.751/- என சேர்த்துக்கொண்டும், பிராதினை திருத்தம் செய்து கொள்ள கோரியும், தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி செய்துள்ள ஆனையர் அறிக்கையில் கண்டுள்ள விபரபடியான ஆக்கிரமிப்புகளை இடித்து வாதிகளின் சுவாதீனத்திற்கு ஒப்படைக்க தக்கதாய் சுவாதீன மீட்பு மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் என சேர்த்தும், அதன் தொடர்ச்சியாக 4வது பரிகாரமாக 4.தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்பு கட்டுமானங்களை இடித்து வாதிகள் வசம் சுவாதீனத்திற்கு ஒப்படைக்க தக்கதாய் 1ம் பிரதிவாதியின் பேரில் செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் அவ்வாறு 1ம் பிரதிவாதி இடித்து சுவாதீனத்திற்கு ஒப்படைக்க தவறும் பட்சம் சமூகம் நீதிமன்ற அமீனா மூலம் தாவா சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை இடித்து அப்புறப்படுத்தி வாதிகளின் சுவாதீனத்திற்கு நிர்வில்லங்கமாய் ஒப்படைக்கதக்கதாய் உரிய உத்தரவிட்டும் என சேர்த்தும் மேற்படி பரிகார காலத்தில் பாராவில் 3 என்பதை பாராவை 5 எனவும் 4 என்பதை 6 என வரிசை எண்களை திருத்தம் செய்தும பிராதினை சீர்திருத்தம் செய்யக்கோரி மனுதாரர்களால் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>

1ம் எதிர்மனுதாரால் ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மற்றவற்றை மனுதார்களே நிரூபித்துக் கொள்ள வேண்டும் என்றும், அசல் வழக்கு கடந்த 2011ம் ஆண்டு 1ம் வாதியால் தாக்கல் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழு வினாக்கள் வனையப்பட்டு வழக்கை விசாரணைப் பட்டியலில் சேர்த்து விசாரணை செய்ய இருந்தபோது மனுதார்கள் தரப்பில் அடுத்தடுத்து மனுக்களைத் தாக்கல் செய்து வருகிறார்கள் என்றும், மேற்படி வழக்கில் இதே பரிகாரம் கேட்டு இடையீட்டு மனுதாக்கல் செய்து அந்த இடையீட்டு மனு எண்.538/2015 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 06.04.2016ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி மனு சங்கதிகளை மறைத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி தரப்பில் 30.03.2012 தேதியில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலேயே தாவாச் சொத்தில் 1ம் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றும், இனிமேல்தான் வீடு கட்டப் போவதாக பிராதில் குறிப்பிட்டிருப்பது உண்மையல்ல என்றும் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தும் அப்போதே பிராதைத் திருத்த நடவடிக்கை எடுக்காமல் இருந்துவிட்டு, தற்பொழுது வேண்டுமென்றே மிகவும் காலதாமதமாக இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், ஆணையர் வரைபடம் தவறுதலாக தாக்கல் செய்து விட்டதாக கூறி பிராதை திருத்தம் செய்வது சரியல்ல என்றும், ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு தற்போது வரையில் Objection தாக்கல் செய்யாமல் இருந்து விட்டு பல வருடங்கள் கழித்து அதனை கொண்டு பிராதை திருத்தம் செய்ய வேண்டிமனு

செய்திருப்பது சரியல்ல என்றும், மனு செய்து திருத்தம் கோரும் பரிகாரங்கள் கால வரையறைச்சட்டத்தால் பாராகி விட்டது என்பதால் மனுவை தள்ளுபடி செய்யக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

இவ்வழக்கில் தாவா வழக்கிற்கு பின் 5, 6 பிரதிவாதிகள் கடந்த 2019 மற்றும் 2020ம் ஆண்டு மேஜர் நிலையை அடைந்த நிலையில் அவர்களுக்கு கார்டியன் ஸ்தானத்தில் இருந்த 2ம் வாதி ஆகிய மனுதாரரை கார்டியன் ஸ்தானத்தில் இருந்து Discharge செய்யக்கோரி I.A.No.1/2025 தாக்கல் செய்யப்பட்டும், 5, 6 பிரதிவாதிகளைப் பொறுத்து மேஜர் டிக்ளர்ரேசன் மனு I.A.No.2/2025 தாக்கல் செய்யப்பட்டு கடந்த 25.02.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும் தாவா வழக்கில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்திருக்கும் "பிராதின் நெடுந்தலைப்பில் 3 முதல் 6ம் வாதிகளை 1, 2 வாதிகளின் மகள் மற்றும் மகன் என்று குறிப்பிடுவதற்கு பதிலாக தவறுதலாக 1, 3 வாதிகளின் மகள் மற்றும் மகன்" என பிராதில் குறிப்பிட்டுள்ள தட்டச்சு குறைபாடுகளையும் திருத்தம் செய்து கொள்ளக் கோரியும் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகளுக்கு எதிராக எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் செய்யப்படவில்லை என்பதாலும்,

பிராதினை திருத்தம் செய்வதன் மூலம் எதிர்மனுதாரர்கள் தரப்பிற்கு எவ்வித பாதகமும் ஏற்படப்போவதில்லை என்பதையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

மேலும் மனுதாரர்கள் தரப்பில் கோரியுள்ள 4 வது பரிகாரமான FMB வரைபடத்தில் என்பதற்கு அடுத்த படியாக "அளவுகள் குறைவாக இருப்பதாக கூறி" என்பதை நீக்கி தாவா சொத்தின் கிரைய ஆவணத்தின் படி வரைபடம் தயார் செய்யாமல் அதாவது "தென்புறம் இருந்து சப்டிவிசன் செய்யாமல் தவறுதலாக வடபுறத்தில் இருந்து சப்டிவிசன் செய்து வரைபடம் ஏற்படுத்தி குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதுடன்" என திருத்தம் செய்யக்கோரப்பட்டுள்ளது. மேலும் 5 ம் பரிகாரத்தில் 1 ம் பிரதிவாதி பிராதிற்கு இப்பால் ஆக்கிரமிப்பு செய்து ஏற்படுத்தியுள்ள கட்டுமானங்களை இடித்து சுவாதீனத்தை ஒப்படைக்க உத்தரவிட்டும் என திருத்தம் செய்யக்கோரப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகளை திருத்தம் செய்யக்கோரி ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் இ.ம.எண்.538/2015 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு கடந்த 06.04.2016 ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவை எதிர்த்து மனுதாரர்கள் தரப்பில் மேல்முறையீடு தாக்கல் செய்யாமல் மீண்டும் அதே பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளதால் மேற்படி பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**முடிவாக, மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. பிராதில் 5, 6 மைனர்களுக்காக அவரது தகப்பனாரும் கார்டியனுமான 1 ம் நபர் மூலமாக என்ற வரியை நீக்கம் செய்யவும், 3 முதல் 6 நபர்களாக குறிப்பிட்டுள்ள விபரத்தில் 1 மற்றும் 2 வாதிகளின் மகள் மற்றும் மகன்**

**என திருத்தம் செய்யவும், 5, 6ம் வாதிகளின் வயதினை திருத்தம் செய்யவும், 6ம் வாதியின் விபரத்தில் 5, 6 மைனர்களுக்காக 1ம் நபர் மூலம் என்பதை நீக்கம் செய்யவும், 5, 6 வாதிகளின் விபரப்பட்டியலில் மேஜர் என திருத்தம் செய்ய உத்தரவிடப்படுகிறது. இதர பரிகாரங்களைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 05.04.2025 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2025.04.05 14:50:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2025.04.05 14:50:35 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.